T.C-043

**018/DM/25**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## GENERAL EDUCATIONAL TEST OF THE S.S.L.C. STANDARD – PAPER-I – GENERAL TAMIL

(Without Books)

Maximum Time : 2.30 hours

Maximum Marks : 100

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**பகுதி – அ**

**I. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி :** (6 × 4 = 24)

1. தமிழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

2. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

3. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

4. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

5. தமிழ் மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.

6. "மாளாத காதல் நோயாளன் போல்" - என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

7. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

8. "சித்தாளின் மனச்சுமைகள்

   செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் தருக.

[Turn over

## பகுதி – ஆ

**II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி :** (6 × 6 = 36)

9. கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர்வகைகளை எழுதுக.

10. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது - இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

11. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

12. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக

13. “தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்” - இடம்சுட்டிப் பொருள் விளக்குக.

14. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

15. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

## பகுதி – இ

**III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி :** (4 × 10 = 40)

16. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

17. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழுகுற விவரித்து எழுதுக.

18. போராட்டக் கலைஞர் - பேச்சுக்கலைஞர் - நாடகக்கலைஞர் - திரைக்கலைஞர் - இயற்றமிழ் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக.

19. தலைப்பு - “விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்” - கட்டுரை எழுதுக.

20. அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

---